1993 ஏப்ரல் 2]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் செய்யாற்றில் கரும்பு கொள்முதல் விலையைக் கொஞ்சம் கூட்ட வேண்டுமென்று சொல்கிறார்கள். அடுத்து திரு. நா.சா. பழனிசாமி.

திரு. நா.சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சர்க்கரை ஆலைகள் கொடுக்கிற விலையை விட தனியாக நாட்டு சர்க்கரை தயாரிப்பவர்கள் கரும்புக்கு அதிகமாக விலை கொடுத்து கரும்பை எடுத்துச் செல்கிறார்கள் இப்போது சர்க்கரை ஆலைப் பகுதிகளில் கரும்பை பதிவு செய்யாதவர்கள் கரும்பை கூட, அவர்கள் நாட்டு சர்க்கரை தயாரிப்பவர்கள் எடுத்துச் சென்றால், அதை பறிமுதல் செய்ய வேண்டுமென்று வேளாண்மைத் துறை இணை இயக்குநர்களுக்கு ஒரு அரசாணை பிறப்பித்து இருப்பதாக நான் கேள்விப்பட்டேன். அதனால் விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்காமல் போகக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. அதைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்குவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சர்க்கரை ஆலைகளில் நல்ல விலை கிடைக்கிறபோது விவசாயிகள் பதிவு செய்யப்படாத கரும்பை ஆலைக்கு வெட்ட வேண்டுமென்று அரசாங்கத்திற்கு கோரிக்கை வைக்கிறார்கள். சில பதிவு செய்யாத விவசாயிகள் சர்க்கரை சத்து சற்று குறைவாக வந்ததன் காரணமாக விலை குறைவு ஏற்பட்டால், அவர்கள் நாட்டு சர்க்கரை தயாரிப்பவர்களுக்கு விற்பதற்கு அண்டை மாநிலங்களுக்கு எல்லாம் சென்று கொண்டிருக்கிறார்கள். எனவே, இதை ஒழுங்கு படுத்த வேண்டுமென்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க அரசு பரிசீலித்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 237, திரு. வி.கே. லட்சுமணன், இருக்கையில் இல்லை. திரு. கே.பி. ராஜு, மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்.

237—

வாலாங்குளத்தில் குடிசை மாற்று வாரியம் மூலம் வீடுகட்டிக் கொடுத்தல்.

*9280—திரு. வி.கே. லட்சுமணன் :

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா :—

கோவை மாநகராட்சி வாலாங்குளத்தில் பல வருடங்களாக குடிசை போட்டு வசித்து வரும் குடும்பங்களுக்கு அதே இடத்தில் குடிசை மாற்று வாரியத்தின் மூலம் வீடு கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

[1993 ஏப்ரல் 2

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

திரு. கே.பி. ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாநகராட்சிக்கு உட்பட்ட வாலாங்குளத்தில் குடியிருக்கிற குடிசை வாழ் மக்கள் அத்தனைபேரும் மழைக் காலங்களில் நீர் அதிகமாக வருகிற காரணத்தால், அவர்களை என்னுடைய பேரூர் தொகுதியில் குனியமுத்தூர், சுகுணாபுரம் பகுதிக்குத் தான் மாவட்ட ஆட்சித் தலைவர் இடம் மாற்றம் செய்கிறார்கள். இப்போது அங்கேயும் இடம் இல்லை. வாலாங்குளத்தில் தண்ணீரில் குடிசைகள் போட்டுக் கொண்டு ஆக்கிரமிப்பு செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நிரந்தரமாக குடிசை மாற்று வாரியத்தின் சார்பாக வேறு இடங்களில் இடம் வாங்கி, குடிசை மாற்று வாரியத்தால் வீடுகட்டித் தரும் எண்ணம் அரசிடம் உள்ள தான் என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறியதுபோல, வாலாங்குளம் பகுதியில் அடிக்கடி மழைக் காலங்களில் வருகின்ற மழை நீரின் காரணமாக அந்தப் பகுதியில் இருக்கிற குடிசை வாழ் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு உள்ளார்கள் என்பதை மனதிலே கொண்டு, தமிழகத்தினுடைய ஒப்பற்ற முதல்வர், இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு கோவையில் அம்மன் குளம் ஏரிப் பகுதியில் மேம்படுத்தப்பட்ட மனைகள் அமைத்து இந்தக் குடிசைவாழ் மக்களை மாற்றுக் குடியில் அமர்த்த திட்டமிட்டு இருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே நேற்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், அம்மன்குளம் ஏரிப் பகுதியிலே இருக்கிற பொதுப் பணித்துறைக்கு சம்பந்தப்பட்ட நிலத்தை வாரியத்திற்கு அளித்துள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சிங்கை கோவிந்தராசு.

திரு. சிங்கை கோவிந்தராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாநகராட்சி வாலாங்குளத்தில் பல வருடங்களாக குடிசை போட்டவர்கள் இன்றைய தினம்—நம்முடைய அன்புத் தாய், தெய்வத் தாய்,

டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியிலே காவிரியே கரை புரண்டு வந்த காரணத்தாலே, வருண தேவன் தன்னுடைய ஆதரவை தமிழகத்திலே பொழிந்ததினாலே குளம் குட்டைகளில் எல்லாம் நிரம்பி வழிந்ததின் காரணமாக, அந்தக் குளம் குட்டைகளிலே குடிசை போட்டுக் கொண்டு இருந்தவர்கள் எல்லாம் இன்றைய தினம்—தண்ணீரிலே மிதக்கின்ற நிலை இருக்கிறது. அதை மாற்றி அமைக்கின்ற வகையில் அவர்களுக்கு எல்லாம் மாற்று இடம் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேட்கப்பட்டு இருக்கிற கேள்வி, கோவை வாலாங்குளம் பகுதியிலே இருக்கிற குடிசை வாழ் மக்களுடைய நெடுநாளைய பிரச்சினையைப் போக்குகின்ற கேள்வியாக கேட்கப்பட்டு இருக்கிறது. அந்த வகையில் வாலாங்குலம் பகுதியிலேயிருக்கிற குடிசை வாழ் மக்களை மாற்றி அமைப்பதற்காக அம்மன்குளம் ஏரிப் பகுதியிலே பொதுப் பணித்துறையினுடைய நிலம் கிடைக்கப் பெற்றிருககிற காரணத்தால், கூடிய விரைவிலே அந்தப் பகுதியிலே இருக்கிற மக்கள் மாற்றி அமைக்கப்படுவார்கள். அதேபோல், கோவை யிலே பல்வேறு இடங்களில் ஏரிப் பகுதிகளிலே இப்படிப்பட்ட குடிசைகள் போடப்பட்டு, மழைக் காலங்களிலே தண்ணீரில் மிதக்கின்ற சூழ்நிலை இருக்கின்ற காரணத்தால் அரசு ஒரு நீண்ட திட்டத்தை ஆய்வு செய்து, அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. எஸ். துரை முருகன்.

திரு. கே. எஸ். துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாநகராட்சிக்கு உட்பட்ட வாலாங்குளம் பகுதியிலே ஏற்கனவே சேரன் போக்குவரத்துக் கழகத்திற்கு இடம் எடுத்து இருக்கிறார்கள். மீதமுள்ள இடத்திலே, தண்ணீரே நிற்பதற்கு வசதி இல்லாத வகையில், இன்றைக்கு ஏழை எளிய மக்கள் நீண்ட நாட்களாக அங்கே குடிசை போட்டு இருந்து வருகிறார்கள். அந்தக் குடிசைகளிலே வாழ்ந்து வரக்கூடிய மக்கள் பெரும்பாலும், நம்முடைய இதய தெய்வம், புரட்சித் தலைவியின் மீது நீங்காத பற்றும் பாசமும் மதிப்பும், மரியாதையும் கொண்டவர்கள். அந்தப் பகுதியிலே உள்ள அந்தக் குளத்திற்கு தண்ணீர் வருகிறபோது, இவர்களுடைய வாழ்க்கை நிலை மிக மோசமாகிவிடுகிறது. அதேமாதிரி தீ விபத்திற்கு உள்ளாகி, குடிசை வாழ் மக்கள் பாதிப்புக்கு உள்ளாகி விடுகிறார்கள். ஆகவே, இந்தச் சூழ்நிலையை அரசு கருத்தில் கொண்டு, அங்கே இருக்கின்ற அத்தனை குடிசை வாசிகளுக்கும்

குடிசைமாற்று வாரியத்தின் மூலமாக விரைவாக எவ்வளவு காலத்திற்குள் அவர்களுக்கு பாதுகாப்பான நிலையை உருவாக்கித் தருவதற்கு அரசு ஆவன செய்யும் என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது வாரியத்தின் வாயிலாக நிலம் கையகப்படுத்தப்பட்டு இருக்கிற காரணத்தால், இந்த நிதி ஆண்டிலே அந்தத் திட்டத்திற்கான பணிகளை வாரியம் துவங்கும் என்பனதத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 238, திரு. தி. சாத்தையா, இருக்கையில் இல்லை, திரு. ஜெ. பாலகங்காதரன், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்.

238—

இராஜபாளையத்தில் ஆதிதிராவிடர் சமுதாயக் கூடம்

*10442—திரு. தி. சாத்தையா: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராஜபாளையத்தில் ஆதி திராவிடர்களுக்கு சமுதாயக்கூடம் கட்டித் தரும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டிக் கொடுக்கப்படும்?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சமுதாயக் கூடம், நிதி வசதி மற்றும் தேவை ஆகியவற்றின் அடிப்படையில் வரும் ஆண்டுகளில் பரிசீலனை செய்யப்படும்.

திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராஜபாளையத்தைப் பொறுத்தமட்டிலும் அதிக அளவில் ஆதி திராவிடர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் வறுமைக் கோட்டிற்குக் கீழே வசிக்கிறார்கள். எனவே, அவர்கள் திருமணம் மற்றும் சில சுப காரியங்களுக்கு மற்ற திருமண மண்டபங்களை அணுகிச் செல்கிறபோது, அதிகமான அளவில் பணம் செலவழிக்க வேண்டியதாக இருக்கிறது. இது அவர்களால் முடியாத காரணத்தால், இந்தத் திட்டத்தை இந்த ஆண்டே ராஜபாளையத்தைப் பொறுத்தமட்டிலும் செயல்படுத்த முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.